SS PRITHVI- PRIT-EDUCATION-CLICK FOR MORE www.Padasalai.Net www.Trbtnpsc.Com

| முதல் திருப்புதல் தேர்வு - 2024 | பதிவெண் |
|---|---|
| **XII - மொழிப்பாடம் - தமிழ்** | |
| நேரம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 90 |

## பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 14 x 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. சுரதா நடத்திய கவிதை இதழ்
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
3. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
   அ) கணிதம் ஆ) இலக்கியம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
4. படிமம் என்பதன் பொருள்
   அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
5. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ____
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும், குடும்பமும் இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும், சங்கமும்
6. பொருத்துக :

| | ஆசிரியர் | | வட்டார வழக்கு |
|---|---|---|---|
| அ) | புதுமைப்பித்தன் | 1. | தஞ்சைத் தமிழ் |
| ஆ) | ஜெயகாந்தன் | 2. | கோவில்பட்டி வட்டாரத் தமிழ் |
| இ) | கி.ராஜநாராயணன் | 3. | சென்னைத் தமிழ் |
| ஈ) | தி.ஜானகிராமன் | 4. | நெல்லைத் தமிழ் |

   அ) 4,1,2,3 ஆ) 4,3,2,1 இ) 1,2,3,4 ஈ) 1,4,2,3
7. மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே
   அ) குறுந்தொகை ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) அகநானூறு
8. ஒருமையுடன் - எவ்வாறு புணர்ந்தது?
   அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
   ஆ) இ ஈ ஐ வழி யவ்வும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
   இ) முன்னின்ற மெய் திரிதல் ஈ) ஈறுபோதல், இனமிகல்
9. TICKET INSPECTOR - என்ற ஆங்கிலச் சொல்லின் கலைச்சொல் யாது?
   அ) பயணச்சீட்டு ஆய்வர் ஆ) இருப்புப்பாதை இ) நடத்துனர் ஈ) தொடர்வண்டி ஆய்வர்
10. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது ஈ) மயில்கள் விறலியரைப் போல ஆடுகின்றன
11. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
   அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்
12. திருக்குறளில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
   அ) 9 ஆ) 7 இ) 4 ஈ) 2
13. திண்ணியர் என்பதன் பொருள்
   அ) அறிவுடையவர் ஆ) மன உறுதி உடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்
14. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வெங்கடசாமி எழுதிய நூல்
   அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும் இ) சமணமும் தமிழும் ஈ) கிறிஸ்தவமும் தமிழும்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 x 2 = 6

15. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக.
16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுதீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு வரைக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2 x 2 = 4

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.
20. 'பருவத்தே பயிர் செய்' - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
21. மணந்தகம் என்பது யாது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** 7 x 2 = 14

22. ***ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக :***
   அ) முன்னுடை ஆ) பூம்பாவாய்
23. ***தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.***
   மாணம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

SS PRITHVI- PRIT-EDUCATION- CLICK FOR MORE www.Padasalai.Net www.Trbtnpsc.Com

24. பின்வரும் சொற்களில் ஏதேனும் ஒரு சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்கவும்.
அ) தாமரை ஆ) கோவில்

25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது.
ஆ) புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்த கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.

26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்

27. கலைச்சொல்லாக்கம் தருக. அ) PASSPORT ஆ) FOLDER

28. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
அ) எலியும் பூனையும் போல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

29. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. விலை, விளை, விழை

30. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க. புல் - புள்

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2 x 4 = 8

31. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
32. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி விளக்குக.
33. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கினை விவரி.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2 x 4 = 8

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். - விளக்குக.
36. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
37. மயிலை சீனி.வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.
38. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் செய்யும் உதவிகள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 x 4 = 12

39. நிரல்நிறையணி (அல்லது) சொற்பொருள் பின்வருநிலை அணியைச் சான்று தந்து விளக்குக.
40. பாடாண்திணை (அல்லது) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.
41. இலக்கிய நயம் பாராட்டுக.
*(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)*

*அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்*
*அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்*
*பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?*
*பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்*
*சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்*
*சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி*
*இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்*
*எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?* - பாரதிதாசன்.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) யானைக்கும் அடி சறுக்கும் *(அல்லது)* ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

43. தமிழாக்கம் தருக
1. Knowledge of language is the doorway to wisdom.
2. A new language is a new life.
3. If you want people to understand you, speak their language.
4. The limits of my language are limits of my world.

## பகுதி - IV

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 x 6 = 18

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. *(அல்லது)*
ஆ) எச்.ஏ.கிருட்டினார் 'கிறித்தவக் கம்பர்' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) பண்டைக்கால கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக. *(அல்லது)*
ஆ) இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள மேலாண்மை கருத்துக்களாக வெ.இறையன்பு கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. *(அல்லது)*
ஆ) 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

47. அ) 'ஒருமையுடன்' - எனத் தொடங்கும் தெய்வமணி பாடலை எழுதுக.
ஆ) 'அரிது' - என முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com